விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 060 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 05 செவ்வாய்க்கிழமை (17.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வாழ்த்துகின்றோம்

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறு பெற வாழ்த்துகின்றோம்.
வலம்புரி கல்விப் பிரிவு

மோடியின் அழைப்பை ஏற்று

## ஜனாதிபதி அநுர குமார இன்று இந்தியா பயணம்



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட அழைப்பிற்கு இணங்க, 'AI Impact Summit 2026' மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இன்று மாலை இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக 15ஆம் பக்கம் பார்க்க

## சட்டத்தரணி படுகொலை சகோதரர்கள் கைது

(கொழும்பு)

அக்குரேகொடப் பகுதியில் சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

கொலைக்கு உதவியமை மற்றும் உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் 20 மற்றும் 24 வயதுடைய இரு சகோதரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கொட்டா 15ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த (சா/த) பரீட்சை இன்று ஆரம்பம்

அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள 15ஆம் பக்கம் பார்க்க

- கறுப்புக்கொடிப் போராட்டம் -

# ஜனநாயகத்தின் ஒரு வெளிப்பாடு



பிரிவினைவாதம் அல்ல அமைச்சர் அபயரத்ன

(கொழும்பு)

சுதந்திர தினமன்று வடக்குக் கிழக்கில் நடைபெற்ற கறுப்புக் கொடிப் போராட்டம் ஜனநாயகத்தின் வெளிப்பாடே, பிரிவினைவாதம் அல்ல என பொதுநிர்வாக அமைச்சர் எச்.அபயரத்ன தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

நெல் உலரவிட்டுக் கொண்டிருந்த

## 21 வயது இளைஞன் மயங்கி விழுந்து மரணம்

(கண்டாவளை)

கிளிநொச்சி வட்டக்கச்சியில் நெல் உலரவிட்டுக் கொண்டிருந்த 21 வயது இளைஞன் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 15ஆம் பக்கம் பார்க்க

## போர் முடிந்து நீண்டகாலமாகியும் மக்கள் மனதில் அமைதி ஏற்படவில்லை

பிரதமர் ஹரிணி அமரசூரிய



(மன்னார்)

நாட்டில் போர் முடிவுக்கு வந்து நீண்ட வருடங்களாகின்ற போதிலும், மக்களின் உள்ளங்களில் இன்னும் அமைதி ஏற்படவில்லை. தங்கள் குடும்பங்களுக்கு என்ன நேர்ந்தது என்று கூடத் தெரியாமல் தவிக்கும் பெண்கள் இன்னும் நம்மிடையே இருக்கிறார்கள் எனப் பிரதமர் ஹரிணி 02ஆம் பக்கம் பார்க்க

காணிப் பிரச்சினை

## கோப்பாயில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் காணிப் பிரச்சினை காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் கல்வியியல் கல்லூரிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற குறித்த கொலைச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பிரதிநிதிகள் குழு

நாட்டுக்கு விஜயம்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா உள்ளிட்ட விசேட பிரதிநிதிகள் குழுவினர் 15ஆம் பக்கம் பார்க்க

ஆஸியை வீழ்த்தி

## "சுப்பர் 8 சுற்றுக்கு" இலங்கை தகுதி



02ஆம் பக்கம் பார்க்க

## காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

யாழ்.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள தனியார் காணிகளை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாத நல்லறிவை ஊக்கும் உங்கள் நாளிதழ்

# நாடு முழுவதும் சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பு

நாடு முழுவதும் சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

தலங்கம, அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் கடந்த 14 ஆம் திகதி ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் துப்பாக்கிதாரிகளை கைது செய்யக் கோரியும் இந்தப் பகிஷ்கரிப்பு இடம்பெற்று வருகிறது.

இதேவேளை யாழ்.குடாநாட்டிலுள்ள நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதன்காரணமாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும் மன்றுக்கு வருகைதரவில்லை.

இதன் காரணமாக நீதிமன்ற வழக்குகள் சட்டத்தரணிகள் இன்றி அழைக்கப்பட்டதோடு, வழக்குகள் திகதியிடப்பட்டன.

இதேவேளை நாடு தழுவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டுவரும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியாவிலும் வழக்கறிஞர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகளும் நேற்று (16) நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து முழுமையாக விலகிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் புண்ணியவதி துஷ்யந்தன் தலைமையில் நேற்று காலை ஒன்றுகூடிய சட்டத்தரணிகள், கறுப்புப் பட்டி அணிந்து தமது கண்டனங்களை வெளிப்படுத்தினர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த தலைவர் புண்ணியவதி துஷ்யந்தன்,

“சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் போராடும் ஒரு சட்டத்தரணிக்கே இந்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பது மிக மோசமான நிலைமையாகும். நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள இந்த "கொலை கலாசாரம்" உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எமது சக சட்டத்தரணியினதும் அவரது மனைவியினதும் படுகொலை ஒட்டுமொத்த நீதித்துறைக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். குற்றவாளிகள் தராதரம் இன்றி உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதுவரை எமது போராட்டங்கள் ஓயாது," எனத் தெரிவித்தார்.

கந்தளாய் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகளும் நேற்று பாரிய கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து சட்டத்தரணிகள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தனர். சட்டத்தரணிகள் உட்பட பொதுமக்களுக்கும் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகும் சூழ்நிலையேற்பட்டுள்ளதன் காரணமாக துப்பாக்கிதாரிகள் கைதுசெய்யப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு முன்பாக ஒன்றுகூடிய சட்டத்தரணிகள் அமைதிமுறையில் போராட்டத்தினை நடாத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தியாகேஸ்வரன் தலைமையில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

20 ஆம் ஆண்டு நினைவலைகள் 15 ஆம் ஆண்டு



தோற்றம் 17.03.1930 | மறைவு 17.12.2006 | தோற்றம் 14.10.1933 | மறைவு 04.03.2011

அமரர் செல்லையா வீரசிங்கம்

அமரர் திருமதி இராசமணி வீரசிங்கம்

திதி: 17.02.2026

காலம் சென்றாலும் குறையாத நேசம்,
கண்ணீர் துடைத்தது உங்களின் பாசம்.
சொல்லாத பாடங்கள் சொல்லியே தந்தீர்கள்.
வாழ்வில் ஒளியாக நீங்களே என்றும்.
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எம்,
இதயத்தில் என்றும் உயிராய் வாழ்கிறீர்கள்...

இல. 14, சிறி வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

(C-5014)

## போர்...

அமர சூரிய தெரிவித்துள்ளார்.

மன்னார், அடம்பன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகளிர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் மொத்த சனத்தொகையில் 52% பெண்கள் உள்ளனர். இது ஒரு பலமிக்க சக்தியாக இருந்த போதிலும், நடைமுறையில் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது அந்தச்சக்தி பெண்களிடம் இருக்கிறதா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

யுத்தம் மற்றும் வன்முறைகள் காரணமாக நாம் ஒருவரை ஒருவர் நம்பாத, பிளவுபட்ட சமூகமாக மாறினோம். இதன் பாதிப்புகளை பெண்களே அதிகம் அனுபவிக்கின்றனர்.

எமது அரசாங்கம் இனவாதத்திற்கு எதிராகப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. மக்கள் அனைவரும் பாதுகாப்பாகவும் சம உரிமையுடனும் வாழவே விரும்புகின்றனர்.

ஆனால், சில இனவாத முகாம்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மீண்டும் முரண்பாடுகளை உருவாக்க முயல்கின்றன.

அவர்களுக்குத் தேவை சாமானிய மக்களின் ஜனநாயகமோ அல்லது சட்டத்தின் ஆட்சியோ அல்ல, மாறாகத் தங்களின் அதிகாரம் மட்டுமே.

2022 இல் ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டுக்குள் திருட்டு, ஊழல் மற்றும் வீண் விரயங்களைத் தடுத்து பொருளாதாரத்தை வலுப்படுத்த எமது அரசால்முடிந்துள்ளது.

எமது எதிர்கால சந்ததியினரை அழிக்கும் விஷத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

கடந்த காலங்களில் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால் இன்று, சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படுகிறது. பொலிஸார் மற்றும் நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குவதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களின் பின்னர், இந்த ஆண்டு பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். ஆசிரியர் மற்றும் அதிபர் காலியிடங்கள் முறையாக நிரப்பப்படும்.

பாடசாலைகளுக்கிடையிலான பாகுபாடுகளைக் களைந்து, ஒவ்வொரு பிரிவிலும் தரமான பாடசாலைகளை உருவாக்கி வருகிறோம் என்றார். (ம-7)

## சுப்பர் 8...

பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று (16) நடைபெற்ற ஐசிசி இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரின் 30-வது லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 8 விக்கெட்டுக்களால் வீழ்த்தி இலங்கை அணி அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி உத்தியோகபூர்வமாக "சுப்பர் 8" சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்த ட்ராவிஸ் ஹெட் 29 பந்துகளில் 56 ஓட்டங்களையும் அணித்தலைவர் மிட்செல் மார்ஷ் 27 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்கள் இருவரும் முதல் விக்கெட்டுக்காகப் பலமான அடித்தளமிட்ட போதிலும், இலங்கைச் சுழற்பந்து வீச்சாளர்கள் போட்டியின் மத்திய பகுதியில் ஆட்டத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

குறிப்பாக, மத்திய வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால், அந்த அணியால் 200 ஓட்டங்களைக் கடக்க முடியாமல் போனது. ஜோஷ் இங்கிலிஸ் 27 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த 3 விக்கெட்டுகளையும்,

வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பத்திரண 0.4 ஓவர்கள் வீசிய நிலையில் உபாதை காரணமாக வெளியேறியது அணிக்குப் பின்னடைவாக அமைந்தது.

பின்னர், 182 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 18 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய தொடக்க ஆட்டக்காரர் பெத்தும் நிஸ்ஸங்க 52 பந்துகளில் 10 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

அவருக்குச் சிறந்த ஒத்துழைப்பை வழங்கிய குசல் மெண்டிஸ் 51 ஓட்டங்களைப்பெற்றார்.

இளம் வீரர் பவன் ரத்நாயக்க ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை நிறைவு செய்தார்.

இந்த வெற்றியுடன் "குரூப் B" பிரிவில் இருந்து இலங்கை அணி அடுத்த சுற்றான "சுப்பர் 8" சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திம்புகோட்பாட்டை மையப்படுத்தி அரசியல் தீர்வு நோக்கிய பயணம்

## யாழில் தமிழ்த்தரப்புகள் தீர்மானம்

**(யாழ்ப்பாணம்)**

**தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில், திம்பு கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கிய சுயாட்சி அம்சங்களுடன் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பது என்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஒருமனதாகத் தீர மானிக்கப்பட்டது.**



நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தற்போதைய அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள, 2015 - 2019 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட "ஏக்கிய ராஜ்ய" (ஒற்றையாட்சி) அரசமைப்பு முறையை அடியோடு நிராகரிப்பதாக இக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துத் தரப்பினரும் உறுதியாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்வே எட்டப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது.

கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

அன்றைய கூட்டத்தில் பங்கேற்ற அரசியல் தரப்புகள் மற்றும் அமைப்புகளைக் கொண்ட ஒரு "பொதுச் சபை" அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒரு விசேட "அரசியல் குழு" அமைக்கப்படும். இக்குழுவானது திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில், தமிழ் மக்கள் சுயாட்சியை முழுமையாக அனுபவிக்கக்கூடிய அரசமைப்பு யோசனைகளைத் தயாரிக்கும் பணியை முன்னெடுக்கும்.

முக்கியமாக, தமிழ் மக்கள் பேரவையால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு ஆலோசனைகள் பெறப்படும். மேலதிகமாக ஏனைய தரப்புகளிடம் உள்ள சிறந்த யோசனைகளும் உள்வாங்கப்பட்டு, ஒரு பொதுவான வரைவு தயாரிக்கப்படும். இந்த வரைவு மீண்டும் பொதுச் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் மக்கள் மட்டத்துக்குக் கொண்டு செல்லப்படும்."

குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளாத ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் எதிர்காலத்தில் இந்த முயற்சியில் இணைய விரும்பினால் அவர் களுக்கான கதவுகள் திறந்தே இருக்கும் என்றும், அனைவரையும் அரவணைத்துத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

---

## பல்கலைக்கழகங்களில் தீவிரமடையும் விரிவுரையாளர் பற்றாக்குறை

(கொழும்பு)

நாட்டில் அரச பல்கலைக்கழக அமைப்பில் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு சுமார் 50 சதவீத தட்டுப்பாடு நிலவுவதாகவும், ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இந்த நிலைமை மிகவும் பாரதூரமானதாக மாறியுள்ளதாகவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவர் சங்கத் தலைவர் திலின நிரோஷ், முகாமைத்துவ பீடத்தில் தற்போது சுமார் 2,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு கற்பிக்க வெறும் 12 பேராசிரியர்கள் மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விரிவுரையாளர் தட்டுப்பாட்டினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் மிக முக்கிய சவாலாக ஆய்வுப் பணிகள் உள்ளது.

ஆய்வுப் பணிகளுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் அறிவையும் வழங்கப் பேராசிரியர்கள் போதிய அளவில் இல்லை.

இதனால் மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதிலும், பட்டப்படிப்பைத் தொடர்வதிலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் வரி அதிகரிப்பு காரணமாகப் பெருமளவிலான விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமை, அரச பல்கலைக்கழகங்களில் இவ்வாறான ஆளணித் தட்டுப்பாடு ஏற்பட பிரதான காரணமாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

---

## பெருமளவு போதைப் பொருட்களுடன் கட்டுநாயக்கவில் மூவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 160 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 16 கிலோ குஷ் ரக போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில், 2 ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

---

## இந்தியா-பாகிஸ்தான் போட்டிக்காக வருகை தந்த பல தனியார் விமானங்கள்

(கொழும்பு)

இந்தியா-பாகிஸ்தான் ரி-20 போட்டியை பார்வையிட கிரிக்கெட் ரசிகர்களை ஏற்றிக் கொண்டு 10 இற்கும் மேற்பட்ட தனியார் ஜெட் விமானங்கள் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னதாக பல வணிக ஜெட் விமானங்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

2026 உலகக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 61 ஓட்டங்களால் பாரிய வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த சிறப்புமிக்க வெற்றியின் மூலம் "A" குழுவிலிருந்து "சுப்பர் 8 (Super 8)" சுற்றுக்குத் தகுதி பெற்ற முதல் அணியாக இந்திய அணி தெரிவாகி உள்ளது.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை காண கொழும்பிலுள்ள ஆர்.பிரேமதாஸ மைதானத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## பழைய கால நேர அட்டவணைகளை நம்பி ஏமாற வேண்டாம்!

### சாதாரண தர பரீட்சார்த்திகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள 2025 (2026) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் நேர அட்டவணை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே பரீட்சார்த்திகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னதாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், இம்முறை பரீட்சையின் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது வினாத்தாள்களுக்கான பரீட்சை நேர அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள கால அட்டவணையை மட்டுமே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் பரவக்கூடிய உறுதிப்படுத்தப்படாத அல்லது பழைய கால அட்டவணைகளை நம்பி ஏமாற வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து நாட்டில் இருபது தமிழ் - பிராமிக் கல்வெட்டுக்கள்

சில நாட்களுக்கு முன் (பெப்ரவரி 11, 2026) சென்னையில் நடைபெற்ற பன்னாட்டுத் தமிழ்க் கல்வெட்டியல் கருத்தரங்கில் இரு ஐரோப்பிய அறிஞர்கள் மிகவும் பரபரப்பான ஒரு செய்தியை வெளிப்படுத்தினர். அது தமிழ்க் கல்வெட்டியல் ஆய்வாளர் மத்தியிலும் வேறும் பலரிடையேயும் நீண்டகாலம் காணப்படாத ஆர்வத்தை ஊட்டி, ஒரு சுவையான பேசு பொருளாகியது.


**யார் இந்த அறிஞர்கள்?**

ஒருவர் பேராசிரியர் இங்கோ ஸ்றௌஹ் (Ingo Strauch) - சுவிற்சர்லாந்திலுள்ள லோஸான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர், சம்ஸ்கிருதம் மற்றும் வட இந்தியக் கல்வெட்டியல் ஆகியவற்றில் புலமைபெற்ற தொல்லியலாளர் மற்றவர் பேராசிரியர் ஷாலொற் ஷ்மிட் (Charlotte Schmid) - பிரான்ஸ் நாட்டில் பாரிஸில் அமைந்துள்ள கீழைத்தேசவியல் நிறுவனத்தைச் சேர்ந்தவர் தமிழ், தென்னிந்தியக் கல்வெட்டியல் ஆகியவற்றில் புலமைபெற்ற தொல்லியலாளர்.

**இவர்கள் தெரிவித்த செய்தி என்ன?**

எகிப்தில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பன்னாட்டு உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் தொல்லியல் தலமாகிய Valley of the Kings (Luxor) என்ற இடத்தில் 3000 ஆண்டுகளுக்கு முன் ஆட்சிசெலுத்திய மன்னர்களுடைய கல்லறைகள் இருக்கின்றன. இவை சுவரோவியங்களும் சிற்பங்களும் நிறைந்த இடங்கள்.

ரோமப் பேரரசு 2000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தைக் கைப்பற்றி ஆண்டபோது தொல்கால எகிப்திய மன்னர் கட்டிய பாரிய பிரமிட்டுகளையும் கல்லறைகளையும் ரோமப் போராளிகளும் நிர்வாகிகளும் வணிகர்களும் கண்டு வியந்தனர். இவற்றுள் சிலவற்றை அக்காலத்தில் அவர்கள் போற்றிய ஏழு உலக அதிசயங்களுள் (Seven Wonders of the World) சேர்த்தனர். இதனால் இவற்றைப் பார்ப்பதற்குச் செல்வந்தரும் வணிகரும் பிறரும்




உல்லாசப் பயணம் செய்தனர்.

**தமிழ்நாட்டு வணிகம்**

இதே காலத்தில், அதாவது 'சங்க காலம்' எனப்படும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்தில், தமிழ்நாட்டு வணிகர்கள் தென்கிழக்கு ஆசியாவுக்கும் மேற்கு நோக்கி எகிப்து வரையும் கப்பலோட்டி வணிகம் நடத்தினர். எகிப்தில் இருந்து கிரேக்க - ரோமர்களுடைய வணிகக் கப்பல்கள் தமிழ்நாட்டுத் துறைகளுக்கு வந்து சென்றன. இந்த நிகழ்வைத்தான் "யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" (யவனர் ஸ்ரீ கிரேக்க-ரோமர் கறி ஸ்ரீ மிளகு) என அகநானூறு கூறுகின்றது.

தென் இந்திய வணிகர் தமிழ்நாட்டின் மேற்குக்கரைத் துறையாகிய முசிறியில் (இன்றைய பட்டனம்) இருந்து புறப்பட்டு எகிப்தை அண்டியுள்ள செங்கடலின் மேற்குக் கரையில் இருந்த பெரெனீக்கே (Berenike) என இன்று பெயர் பெறும் துறைக்குச் சென்றனர். தமிழ்நாட்டுக்குச் சென்றுவந்த கிரேக்க - ரோம வணிகரும் இத்துறைக்குத்தான் திரும்பி வந்தனர். இங்கே பெருந்தொகையான இந்தியப் பொருட்கள் இறக்குமதியாகின. இவற்றுள் சேரநாட்டு மிளகு முக்கியமானது. அண்மைக் காலத்தில் தொல்லியல் ஆய்வின் போது ஒரு சாடியில் ஏழு கிலோவுக்கு மேலான நிறையுள்ள மிளகு கண்டெடுக்கப்பட்டது. எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பிறபொருட்களுள் முத்து, இரத்தினங்கள், அரிசி, தேக்கு மரம் போன்ற பிற பொருட்களும் அடங்கும்.

**பெரெனீக்கே**

பெரெனீக்கே துறையில் இறக்கப்பட்ட பண்டங்கள் ஒட்டகங்களின் முதுகில் ஏற்றப்பட்டு நைல்நதிக் கரையில் இருந்த கொப்ட்ஸ் (Coptos) துறையில் இறக்கப்பட்டுக் கப்பல்கள் மூலம் எகிப்தின் வடகரையில் (மத்தித்தரைக் கடல் கரையில்) இருந்த பெருநகராகிய அலெக்ஸாந்திரியாவுக்கு (Alexandria) எடுத்துச் செல்லப்பட்டன. அங்கிருந்து கப்பல்களில் அவை பேரரசின் தலைநகராகிய ரோமாபுரிக்குச் சென்றன.

பண்டங்களைப் பெரும்பாலும் பானைகளில் எடுத்துச் செல்லும் வழக்கம் அப்பொழுது இருந்தது. இப் பானைகளில் வணிகர் தம் பெயர்களை எழுத்தாணியால் எழுதினர். தமிழ்நாட்டு வணிகர் அக்காலத்தில் வழங்கிய தமிழ்-பிராமி எழுத்தில் எழுதினர். இவையே தமிழ் - பிராமிக் கீறல்கள் (graffiti) எனப் பெருந்தொகையாக இன்று தொல்லியலாளர் வெளிப்படுத்தியவை. பெரெனீக்கேயிலும் தமிழ் - பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள்கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டு வணிகர் (பிற இந்திய வணிகரும் கூட) திரும்பிச் செல்வதற்குச் சில மாதங்கள் பெரெனீக்கேயில் தங்க வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் திரும்பிச் செல்லும் பாய்க்கப்பல்களுக்குச் சாதகமான பருவக்காற்று (monsoon winds) பெயரும் வரை காத்திருக்கவேண்டிய நிலை. இப்படியான ஓய்வுக் காலத்தில் இந்திய வணிகர்களும் எகிப்தியத் தொல்லியல் தலங்களுக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்டனர் என இப்பொழுது அறிய முடிகின்றது.

பெரெனீக்கேயில் இருந்து கல்லறைகள் இருக்கும் இடம் (Luxor) 350க்கும் மேற்பட்ட கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

**கல்லறைகளை நோக்கி**

எவ்வாறு இது நடைபெற்றது என்பதை ஓரளவு ஊகிக்கலாம். தமிழ் வணிகர்களுடன் குஜராத்தில் இருந்து சென்ற வணிகர்களும் பெரெனீக்கேயில் இருந்தனர். இந்திய வணிகர்களுள் பலர் கிரேக்க மொழியைத் தெரிந்திருப்பர். கிரேக்க வணிக நண்பர்கள் இந்திய வணிகருக்கு எகிப்து மன்னரின் கல்லறைகள் பற்றிக் கூறி அவர்களை அழைத்துச் சென்றிருப்பர். இந்திய வணிகர் அச்சம் இல்லாது அவர்களுடன் சென்றிருப்பர்.

எவ்வாறாயினும் இந்திய வணிகர் கல்லறைகளுக்குச் சென்றுவரும் வழக்கம் இருந்தது உண்மையே. இவர்களுள் சிலர் கிரேக்கர்களைப் போல அங்கு ஒரு செயலில் ஈடுபட்டனர். அதுதான் இங்கு எங்களுடைய கவனத்தை ஈர்ப்பது.

உல்லாசப் பயணிகளுள் சிலர் தாம் கல்லறைகளுக்குச் சென்றதைப் பதிவு செய்ய விரும்பிச் சுவர்களில் தம் பெயர்களை கூரிய பொருளால் (அல்லது ஆணியால்) எழுதினர். இன்றும் இவ் வழக்கம் இருப்பதை நாம் அறிவோம். இந்த எழுத்துக்களை graffiti / கீறல்கள் என்பர். கல்லில் எழுதப்பட்டு இருப்பதால் இவற்றைக் கல்வெட்டு என்றும் கூறலாம்.

பொ.ஆ.முதலாம் நூற்றாண்டுக்கும் 5ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் 2000க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கிரேக்க மொழியிலும் ஒரு சில லத்தீன் மொழியிலும் இங்கு எழுதப்பட்டன. இக் கல்வெட்டுக்கள் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் (1926 இல்) Jules Baillet என்ற பிரெஞ்சு அறிஞரால் பதிப்பிக்கப்பட்டு நூலாக வெளிவந்தன.

**தமிழ் வணிகர் பதிவுகள்**

கிரேக்க மொழியில் எழுதியோர் பெரும்பாலும் தம் பெயருடன் "நான் வந்தேன், நான் இதைப் பார்த்தேன்" எனவும் எழுதினர். சிலர் தாம் கண்டு ரசித்தமை பற்றியும் எழுதினர். எடுத்துக்காட்டு: "நான் அம்மோனியொஸ் இத்தாலிக் காவல் போராளி பார்த்தேன் ரசித்தேன்".

சுவரில் இத்தகைய பொறிப்புகளைக் கண்ட தமிழ் வணிகர் சிலரும் தம் பெயர்களை எழுதினர். நூறு ஆண்டுகளுக்கு முன் Jules Baillet இவற்றைக் கண்டிருந்தும், இவை தனக்குத் தெரியாத மொழியில் இருப்பதாகக் கருதிக் கவனம் செலுத்தாது விட்டார். இவற்றை அண்மைக் காலத்தில் பேராசிரியர் இங்கோ ஸ்றௌஹ் கண்டு, பிரதிபண்ணி, பேராசிரியர் ஷாலொற் ஷ்மிட் அம்மையாருடன் சேர்ந்து வெளிப்படுத்தியுள்ளார். இவர் கண்ட 30 இந்தியமொழிக் கல்வெட்டுக்களுள் 20 தமிழ்-பிராமியில் உள்ளன. இவற்றை எழுதியவர்களுள் ஒருவர், சிகை கொற்றன் என்பவர், கல்லறைகளில் இவர் எட்டு இடங்களில் தன் பெயரை எழுதியுள்ளார். ஒன்று இவ்வாறு உள்ளது. "சிகை கொற்றன் வரா கண்டா" (சிகை கொற்றன் (இங்கு) வந்து பார்த்தான்).

கா.இந்திரபாலா



இக்கல்வெட்டுக்கள் பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் உடையவை

# இந்தியா - பாகிஸ்தான் இடையே தொடரும் கைகுலுக்காத கலாசாரம்




இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது.

இரு அணித் தலைவர்களும் கைகுலுக்குவதைத் தவிர்த்துள்ளமை கிரிக்கெட் உலகில் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

கடந்த 2025 ஆசியக் கிண்ணப் போட்டியின் போதும் இரு அணித் தலைவர்களும் கைகுலுக்குவதைத் தவிர்த்திருந்தனர்.

அத்துடன் போட்டி நிறைவடைந்த பின்னர் இந்திய வீரர்கள் பாகிஸ்தான் வீரர்களுடன் கைகுலுக்குவதைத் தவிர்த்தமை பெரும் விவாதங்களை ஏற்படுத்தியது.

காஷ்மீரின் பஹல்ஹாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவாகவும், அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலுமே இந்த முடிவை எடுத்ததாக இந்திய அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ் அப்போது தெரிவித்திருந்தார்.

இச்செயற்பாடு குறித்து அதிருப்தி வெளியிட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் முறைப்பாடும் செய்திருந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கைகுலுக்கல் இடம்பெறுமா என்ற பலத்த எதிர்பார்ப்பு நிலவியது.

இது குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட போது, "நாணய சுழற்சியின் போது என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்" என சூர்யகுமார் யாதவ் மற்றும் பாகிஸ்தான் அணித்தலைவர் சல்மான் அகா ஆகிய இருவருமே குறிப்பிட்டிருந்தனர்.


இருப்பினும், போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற நாணய சுழற்சியின் போது இரு அணித்தலைவர்களும் மீண்டும் கைகுலுக்குவதைத் தவிர்த்துள்ளனர். இச்சம்பவம் விளையாட்டு உலகில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 89,000 ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குக

## பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



(டில்லி)

**கடந்த நான்கு தசாப்தங்களாகத் தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சினைக்கு "மனிதாபிமான மற்றும் நடைமுறைச் சாத்தியமான" தீர்வை வழங்குமாறு கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் தனது கடிதத்தில், சுமார் 89,000 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் அகதி முகாம்களிலும் அதற்கு வெளியேயும் வசித்து வருகின்றனர்.

இவர்களில் சுமார் 40 சதவீதமானோர் இந்தியாவில் பிறந்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பாலானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசித்து வருகின்றனர். நீண்ட காலம் தங்கியிருந்த போதிலும், இதுவரை 11 பேருக்கு மட்டுமே இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் மட்டுமே வாக்காளர் உரிமையைப் பெற்றுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைத் தடுக்கும் முந்தைய நிர்வாக உத்தரவுகளை ரத்து செய்ய வேண்டும் என ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

2015 ஜனவரி 9 ஆம் திகதி வரை தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்களை "சட்டவிரோத குடியேறிகளாக" கருதக்கூடாது என அதிகாரப்பூர்வமாக அறிவித்தல் போன்ற பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

இந்த விவகாரம் கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, தி.மு.க அகதிகள் விவகாரத்தை ஒருபோதும் எழுப்பவில்லை என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கு தி.மு.க எம்.பி கனிமொழி கருணாநிதி ஆதாரங்களுடன் மறுப்புத் தெரிவித்திருந்தார். (ந)

# பொது பாதுகாப்பு அமைச்சர் பதவி விலக வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்தல்



(கொழும்பு)

சட்டத்தரணி புத்திக மல்லவராச்சி மற்றும் அவரது மனைவியின் கொலையைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சட்டத்தின் ஆட்சிக்கும் இலங்கையின் சட்ட அமைப்பின் ஒருமைப்பாட்டிற்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி அந்த அறிக்கையில் எச்சரித்துள்ளது.

பெப்ரவரி 13 அன்று பட்டப் பகலில் நடந்த துப்பாக்கிச் சூடு, சட்டம் மற்றும் ஒழுங்கில் குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

அண்மைய கொலைகளால் ஏற்கனவே சட்டம் மற்றும் ஒழுங்கு பலவீனமடைந்துள்ளதாக அது விவரித்துள்ளது.

மேலும் விசாரணையை கையாள்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவலைகளை எழுப்பியது, பொலிஸ் துறைக்குள் அரசியல்மயமாக்கல் இருப்பதாகவும் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துவதற்கான அதிகாரிகளின் திறனை கேள்விக்குள்ளாக்குவதாகவும் குற்றம் சாட்டியது.

அத்துடன், உடனடி நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்த ஐக்கிய தேசியக் கட்சி, பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் பதவி விலக வேண்டும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்தாலோசித்து பொருத்தமான புலனாய்வுக் குழுவை நியமிக்க வேண்டும், சட்டத்தரணி தொழில் பாதுகாப்பிற்கான ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பாதுகாப்புகளை செயற்படுத்த நிர்வாக அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

மேலும் இலங்கையில் சட்டத்தரணிகளுக்கு போதுமான பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முயற்சிகளை ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ந)

# ஓரிரு துப்பாக்கிச் சூடுகளால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தில்லை

## சரத் பொன்சேகா அதிரடி கருத்து



(கொழும்பு)

ஒரிரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை என இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் நிலைமையைப் புரிந்துகொண்டு அதை நிர்வகிக்கும் திறன் கொண்டது எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அண்மைக் காலமாக, பல்வேறு குழுக்கள் அமைதியின்மையை உருவாக்குவதற்கும், இனவாத பதற்றங்களைத் தூண்டுவதற்கும், பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இருப்பினும், ஆயுதப்படைகள் தங்கள் கடமைகளை உரிய முறையில் முன்னெடுப்பதாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்கள் முற்று முழுதாக ஒழிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நாட்டில் முன்னெடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார். (ந)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொண்ட விசேட சுற்றுவளைப்பு நடவடிக்கையின் போது காங்கேசன்துறை கடற்பரப்பை அண்டிய பகுதிக்குள் இரு படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த படகோட்டிகள் உள்ளிட்ட 25 தொழிலாளர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.


கைது செய்யப்பட்ட 25 பேரையும் அவர்களின் படகுகளையும் கரைக்கு கொண்டு வந்த கடற்படையினர், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர். (8-33)

# சந்தைகளில் நேற்றைய விலை


பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 400 | 400 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 200 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 300 | 400 | 450 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 150 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 200 | 200 | 200 | 100 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 220 | 200 |
| கரட் | 250 | 350 | 400 | 400 | 350 | 280 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 150 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 400 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 600 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 400 | 300 | 280 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 250 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 | 500 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | 350 | -- | -- |
| கீரை - 1 பிடி | 120 | 80-140 | 150 | 120 | -- | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 200 | 200 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 550 | 450 | 400 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 70 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 200 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 130 | 150 | 80 | -- | 50 |
| வெள்ளரி | 60 | 80 | 100 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மகாசிவராத்திரி பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நகுலேஸ்வரம், திருக்கேதீச்சரம், வெடுக்குநாரிமலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயங்களில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

## புதிய நிர்வாகசபைத் தெரிவு

(இருபாலை)

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.


சனசமூக நிலையத் தலைவர் செ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் விசேட விருந்தினராக உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் து.இளமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)


## கற்றல் உபகணரங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் மற்றும் ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு புத்தகப்பைகள் உள்ளிட்ட கற்றல் உபகர்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய ரோட்டரி ஆளுநர் கரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மலேசிய ரோட்டரி மாவட்டத்தின் நிதிப்பங்களிப்பில் உதவித் திட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டிருந்தன. (8-30)





கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவ தீர்த்த திருவிழா நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- சிவசாந்தன்)

## ஐந்து மாதங்களின் பின்னர் நெடுந்தீவைச் சென்றடைந்த பேருந்து

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று கடற்படையின் விசேட படகு மூலம் நெடுந்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இதுவரை காலமும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஒரே ஒரு பேருந்து மாத்திரமே தீவு முழுவதற்குமான சேவையில் ஈடுபட்டிருந்தது.

நீண்ட நாட்களாக சேவையில் ஈடுபட்ட குறித்த பேருந்து, துரு ஏறி அடிக்கடி பழுதடையும் நிலையில் , கடும் சிரமத்திற்கு மத்தியில் பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

அதிகளவான சுற்றுலா பயணிகள் நெடுந்தீவுக்கு செல்லும் நிலையிலும் , அங்குள்ள மக்களின் போக்குவரத்திற்கும் பெரும் இடர் நிலவி வந்த நிலையில் , கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற போக்குவரத்து ஒருங்கிணைப்பு விசேட குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு பேருந்து விடயம் குறித்து பேசப்பட்டது.

அது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அப்போது அமைச்சர் கூறியிருந்த நிலையில் சுமார் 5 மாதங்களின் பின்னர் நெடுந்தீவுக்கு பேருந்து கொண்டு செல்லப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இதுவரை காலமும் நெடுந்தீவில் சேவையில் ஈடுபட்ட பேருந்து திருத்த வேலைகளுக்காக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)

## வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபை வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்தியஸ்த சபை தவிசாளர் திருமதி முரளிதரன் கௌரி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் உமாகாந்தன் சிவகாமி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-106)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய பூங்காவன விழாக்குழு இளைஞர் தொண்டர் சபையின் புதுவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் ஆலய மண்டபத்தில் ர.வினோதீஷ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கி. விஜேந்திரா தலைவராகவும், ஜெ.ரவிசாந் உப தலைவராகவும், உ.இந்துஜன் செயலாளராகவும், அ.கிஷான் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (8)



இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய 14 வயதுப் பிரிவினருக்கான சமபோஷா சம்பியன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் கல்லூரி அதிபர் அருட்திரு A P திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

## புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இல.66 கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சைவ பரிபாலன சபை தேர்வுச் செயலாளர் விஜயசிங்கம் தலை மையில் இடம் பெறவுள்ளது. விஜயசிங்கம் தயாபரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வடக்கு, பரந்தன் வலயக் கல்விப் பணிப்பாளர் அருளானந்தம் சிவனருள் ராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

## யாழ்.பல்கலைப் பேரவை உறுப்பினரை பதவி நீக்கம் செய்தமை தவறானது

### மீளவும் இணைக்குமாறு உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவையில் இருந்து முறையான காரணம் இன்றி தன்னை நீக்கியமைக்கு எதிராக, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வட மாகாணப் பணிப்பாளர் ரி. விமலன் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில் அவரை மீளவும் பதவியில் அமர்த்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சில பல்கலைக்கழகங்களின் பேரவை நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்பட்டன.


இந்த நடவடிக்கையின் கீழ், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக பேரவையிலி ருந்து காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வட மாகாண பணிப்பாளர் விமலன் அவர்களுடைய பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே விலக்கப்பட்டிருந்தார்.

இதற்கு எதிராக அவர் நீதி மன்றத்தில் வழுங்குத் தொடர்ந்ததற்கு அமைய இந்தப் பதவி நீக்கம் தவறா னது என்றும் அவரை மீண் டும் பேரவை உறுப்பினராக இணைக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதிவரை செல்லுபடியாகக் கூடிய வகையில் இந்த நிய மனம் மீள வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அவரின் திருத்தப்பட்ட சுய விபரக்கோவையை அனுப்பிவைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் தொடர்பான எந்தவொரு சட்டமூலமும் தேவையில்லை

## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர்



(அராலி)

**எமது நாட்டுக்கு பழைய பயங்கரவாத தடைச் சட்டமும் தேவையில்லை, அதேபோல புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டமும் அவசியமில்லை என யாழ்ப்பாணம் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் எதிர்காலத்தில் கொண்டுவர முயற்சிக்கின்ற பயங்கரவாதம் தொடர்பான சட்டமூலத்திற்கு எதிரான கையொப்பப் போராட்டத்தில் நேற்று கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்தார்கள். எத்தனையோ பேரின் வாழ்க்கையில் கவலைகளும், வலிகளும், இழப்புக்களும் ஏற்பட்டன.

ஆகவே இவ்வாறான ஒரு சட்டமூலத்தை நீக்குமாறு நீண்ட காலமாக அரசாங்கங்களை, தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது அந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகின்ற பாணியில் புதிய ஒரு சட்டமூலத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய சட்டத்தின் மூலமாகவும் தமிழ் மக்களுக்கு பிரதானமான பாதிப்புகள் ஏற்படும். இதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கையானது தொடர்ச்சியாக பயத்தின் மத்தியிலேயே தொடரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் அமைதியாகவும் பயமில்லாமலும் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு பழைய பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கிவிட்டு, புதிதாக எந்த சட்டமூலத்தையும் அறிமுகம் செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடமும் நீதி அமைச்சிடமும் தமிழ் மக்களாகிய நாங்கள் முன்வைக்கின்றோம்.

எமது இந்த கோரிக்கையை அரசாங்கமானது ஏற்று, தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்து தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-104)

# கிளிநொச்சி, முல்லைத்தீவிற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தனியான பிராந்திய காரியாலயம்

## அமைச்சர் சுசில் ரணசிங்க

(தருமபுரம்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தனியான பிராந்திய காரியாலம் அமைக்கப்படுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 12 ஆயிரம் நீர் இணைப்புக்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன நாளாந்தம் நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் பொருட்டு இவ்விரு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு பல்வேறு தேவைகள் தினமும் ஏற்படுகின்றன. ஆனால் அதனை உடனடியாக விரைந்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம் இங்கு இம் மாவட்டங்களுக்கு என தனியான பிராந்திய முகாமையாளர் காரியாலயம் இல்லாமை ஆகும்.

எனவே கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு என தனியான பிராந்திய முகாமையாளர் காரியாலயம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரும் தனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

எனவே இங்கு எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள அபிவிருத்திகளை கவனத்தில் கொண்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயரதிகாரிகளுடனும் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (8-316)

# சுற்றுலா முதலீடுகளுக்கு 10 ஆண்டுகள் வரிச்சலுகை

## அரசாங்கம் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

சுற்றுலா, உற்பத்தி மற்றும் விவசாய துறைகளில் மூலோபாய மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடுகளுக்கு 10 ஆண்டுகள் வரை வரிச் சலுகைகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த உத்தரவின் கீழ், 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதல் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான முதலீடுகளுக்கு வரிச் சலுகைகள் பொருந்தும்.

தகுதியான திட்டங்கள் குறைந்தது 50 உள்ளூர் வேலைகளை உருவாக்க வேண்டும் என்று நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தகுதிவாய்ந்த முதலீடுகளுக்கு ஐந்து முதல் 10 ஆண்டுகள் வரையிலான நிறுவன வருமான வரி விலக்குகள் வழங்கப்படும்.

திட்டங்களுக்குத் தேவையான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வரிச் சலுகைகள் பொருந்தும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# தொழில்நுட்பவியல் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையில் நிலவும் தொழில்நுட்பவியல் சார்ந்த பதவிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மண் பரிசோதகர் - மாகாண தொழில்நுட்பவியல் சேவை தரம் III அல்லது பயிற்சித் தரம் (அறிவித்தல் இல: R/2026/04)

ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவை தரம் III (அறிவித்தல் இல: R/2026/05)

வேலை மேற்பார்வையாளர் - வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களம் தரம் III (அறிவித்தல் இல: R/2026/06)

மேற்படி பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை மற்றும் விண்ணப்ப விபரங்கள் அடங்கிய முழுமையான விளம்பரத்தை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் "Exam and Recruitment Advertisement" எனும் பகுதியில் பார்வையிட முடியும்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 2026.03.03 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (8)




பருத்தித்துறை தும்பளை புனித லூர்து மாதா திருத்தல திருவிழாவின் திவ்விய நற்கருணை திருவிழா திருப்பலியும் ஆராதனையும் அண்மையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

(படங்கள்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## விண்வெளியில் தேநீர் குடிக்க நாசா உருவாக்கிய கோப்பை




பூமியில் நாம் தேநீர் அல்லது தண்ணீர் குடிப்பதை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம்.

ஒரு கோப்பை சரிந்து திரவம் கீழே சிந்துவது ஈர்ப்பு விசையின் இயல்பு.

ஆனால், ஈர்ப்பு விசை இல்லாத சூழலில் இது சாத்தியமில்லை.

இதற்கான தீர்வாக நாசா விண்வெளி வீரர் டொனால்ட் பெட்டிட் உரு



வாக்கிய கேபிலரி கோப்பை என்பது, பூச்சிய ஈர்ப்புச் சூழலில் பயன்படுத்தப்படும் திறந்த குடிநீர் கோப்பை ஆகும்.


திரவங்கள் இயல்பாக சிந்தாமல் தந்துகி இயக்க கொள்கையை பயன்படுத்தி இந்தக் கோப்பை பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் எளிய பொருட்களால் தயாரிக்கப்பட்ட இந்த வடிவமைப்பு பின்னர் 3D அச்சிடப்பட்ட வடிவமாக உருவாக்கப்பட்டு நாசாவால் சோதிக்கப்பட்டது.

தற்போது இது சர்வதேச விண்வெளி நிலையத்தில் பயன்படுத்தப்படுகிறது மற்றும் விண்வெளியில் காப்புரிமை பெற்ற முதல் தயாரிப்பாக கருதப்படுகிறது

இந்தக் கண்டுபிடிப்பு விண்வெளியில் வாழ்வாதாரத்தை மனிதர்களுக்கு இயல்பாக மாற்றுகிறது. (3)

# சமரசத்திற்



**(டெஹ்ரான்) ..... ஈரான் மீதா**
**தாரத் தடையை நீக்**
**சக்தித் திட்டம் குறித்**
**வுடன் சமரசம் செய்**
**இருப்பதாக ஈரான்**
**விவகார அமைச்**
**துள்ளார்.**

டெஹ்ரானில் பிபிசிக்கு அளித்த பேட்டியில் ஈரான் துணை வெளியுறவு அமைச்சர் மஜீத் தக்த் - ரவாஞ்சி, “அணு ஒப்பந்தத்தை அடைய ஈரான் சில சமரசங்களை செய்ய தயாராகவுள்ளது.

ஆனால், அமெரிக்கா தடைகளை நீக்குவது குறித்து பேசத் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, “ட்ரம்ப் ஒப்பந்தத்தை விரும்புகிறார், ஆனால் ஈரானுடன் ஒப்பந்தம் செய்வது கடினம்” என்று கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஈரான், 60 சதவீதம் அளவுக்கு செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை குறைப்பது குறித்து, “நாங்கள் சமரசம் செய்யத் தயாராக உள்

ளோம்
ஓமன்
ஏற்கனவே
தைகள்
அதன்
செய்வா
இரண்டா
நடைபெ
இச்சந்

## வட்ஸ்அப் செயலிக்கு முழுமையான தடை விதித்தது ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யாவில் வட்ஸ்அப் மீதான தடை உத்தியோகபூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கிரெம்ளின் மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கிரெம்ளின் ஊடகப் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ்,

இந்தத் தீர்மானம் ஏற்கனவே எடுக்கப்பட்டு தற்போது முழுமையாக அமுல் படுத்தப்பட்டுள்ளது.



ரஷ்யாவின் தேசியச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளைப் பின்பற்ற வட்ஸ்அப் நிறுவனம் தொடர்ந்து மறுத்து வருகிறது.

பயங்கரவாதம் மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்க, அரசு கோரும் தகவல்களை வழங்க “மெட்டா” நிறுவனம் மறுப்புத் தெரிவிக்கிறது.

ரஷ்யச் சட்டப்படி, ஒரு வெளிநாட்டுத் தொழில்நுட்ப நிறுவனம் அங்கு செயற்பட வேண்டுமெனில், உள்ளூரில் ஒரு பிரதிநிதி அலுவலகத்தைத் திறக்க வேண்டும். வட்ஸ்அப் இதனைச் செய்யத் தவறியுள்ளது.

வட்ஸ்அப்பிற்குப் பதிலாக ரஷ்யாவிலேயே உருவாக்கப்பட்ட “MAX” என்ற தேசியச் செயலியைப் பயன்படுத்த மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

“MAX செயலி ஒரு சிறந்த தேசிய மாற்றாகும். இது குடிமக்களின் தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது” என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவில் சுமார் 10 கோடி பயனர்கள் வட்ஸ்அப்பை பயன்படுத்தி வந்தனர். தற்போது நேரடி அணுகல் தடைசெய்யப்பட்டுள்ளதால், பயனர்கள் இதனைப் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், பலர் “விபிஎன்” (VPN) சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தத் தடை ரஷ்யாவின் “டிஜிற்றல் இறையாண்மையை” பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய நடவடிக்கை என்று அந்நாட்டு அரசாங்கம் கருதுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ற்கு தயார்!

தான பொருளா
நீக்கினால் அணு
றித்து அமெரிக்கா
செய்யத் தயாராக
ன் துணை வெளி
மச்சர் தெரிவித்



ாம்" என்று தெரிவித்துள்ளது.

மன் நாட்டின் மத்தியஸ்தத்தில் னவே முதல் சுற்றுப் பேச்சுவார்த் கள் ஆரம்பமாகியுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, இன்று வ்வாய்க்கிழமை ஜெனீவாவில் ண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் டபெறவுள்ளன.

இச்சந்திப்பில் அமெரிக்கத் தரப்பில் ஜாரெட் குஷ்னர் மற்றும் ஸ்டீவ் விட்காஃப் ஆகியோர் அடங்கிய குழுவினர் ஈரானியப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

அணுசக்தி விவகாரத்தில் நெகிழ்வுத்தன்மையைக் காட்டத் தயாராக இருக்கும் ஈரான், தனது ஏவுகணைத் திட்டம் போன்ற பிற விவகாரங்களை அணுசக்திப் பேச்சுவார்த்தைகளுடன் இணைப்பதற்குத் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

## ஆர்ஜென்டீனாவில் சிறுவர்கள் குற்றவாளிகளாக கருதப்படும் வயதெல்லை குறைப்பு



(புவெனஸ் ஐரிஸ்)

ஆர்ஜென்டீனாவில், சிறுவர் குற்றவாளிகளாகக் கருதப்படும் வயது எல்லை 16 இலிருந்து 14 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்டமூலம் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த நாட்டு ஜனாதிபதி ஜேவியர் மிலே தலைமையிலான அரசாங்கம், பாராளுமன்றத்தின் கீழ் சபையில் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் குழுவினர் சிறுவர்களைப் பயன்படுத்தி படுகொலை உள்ளிட்ட கொடூரமான குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்கவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் தற்போது செனட் சபையின் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சட்டத்தின் ஊடாக சிறுவர்களைச் சிறையில் அடைப்பதால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என தெரிவித்து மனித உரிமை ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)




## குறைந்த வயதில் ஐந்து பேருக்கு மறுவாழ்வளித்த பெண் குழந்தை



(டில்லி)

இந்தியாவின் கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள மலப்பள்ளியைச் சேர்ந்தவர் அருண் ஆபிரகாம்.

இவருடைய மனைவி ஷெரின் ஆன் ஜான். இந்த தம்பதியின் 10 மாத பெண் குழந்தை அலின் ஷெரின் ஆபிரஹாம்.

இந்நிலையில், கடந்த 5ஆம் திகதி குழந்தையின் தாய், தாத்தா, பாட்டி ஆகியோர் கோட்டயத்தில் இருந்து திருவல்லாவுக்கு காரில் சென்றனர்.

அப்போது, எதிரில் வந்த மற்றொரு கார் இவர்களின் கார் மீது மோதியது.

இதில் ஷெரினின் தாய், தாத்தா மற்றும் பாட்டி காயமடைந்தனர்.

படுகாயமடைந்த குழந்தை ஷெரின் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மூளைச்சாவு அடைந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

இதையடுத்து மருத்துவர்கள், குடும்பத்தினர் சம்மதத்துடன் குழந்தையின் கல்லீரல், சிறுநீரகங்கள், இதய வால்வு, கண்கள் ஆகியவற்றைத் தானமாகப் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து, குழந்தையின் கல்லீரல், திருவனந்தபுரம் கிம்ஸ் வைத்தியசாலையில் உள்ள 6 மாதக் குழந்தைக்கு பொருத்தப்படவுள்ளது.

சிறுநீரகங்கள், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் உள்ள மற்றொரு குழந்தைக்கு வழங்கப்பட்டது.


இதய வால்வு மற்றும் கண்கள், சித்ரா இன்ஸ்டிடியூட் மற்றும் அமிர்தா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோருக்கு வழங்கப்பட்டன.

இதன் மூலம், கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்புத் தானம் செய்து 5 பேருக்கு மறுவாழ்வளித்த பெருமை அலின் ஷெரினுக்குக் கிடைத்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத் தடைச்சட்டம்

# 'பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்' யாழில் கையெழுத்துப் போராட்டம்



(அராலி)

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டமும், இனிமேல் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவா தத்தில் இருந்து அரசாங்கத்தை பாதுகாக்கும் சட்டமும் வேண்டாம் என தெரிவித்து "பழசும் வேண்டாம் புதுசும் வேண்டாம்" என்ற தொனிப்பொருளில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

நேற்று முன்தினம் திருகோண மலை மாவட்டத்தில் ஆரம்பமாகிய குறித்த போராட்டம், நேற்று யாழ்ப் பாணம் மறை மாவட்ட ஆயர் இல்லத் திலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் மறை மாவட்ட ஆயர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், ஏனைய மதகுருக்கள் குறித்த சட்டங் களை எதிர்த்துக் கையொப்பமிட்டனர்.

இதன்போது குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உடனிருந்தார்.

இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரி விக்க விரும்பும் புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்ற உறவுகளும் கையொப்ப மிடும் வகையில் இணைய வழி மூல மான கையொப்பமிடும் வசதியும் நேற் றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (8-104)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1986- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி-பா-52<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: QS, Teacher<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16524 | பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி-பா-45<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc,QA Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/16539 |
| பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>8இல்செவ்<br>கி-பா-24 1/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்- BSc, Civil Engi neer (Singapore)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16525 | பிறப்பு:1997-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Degree, Australia<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: G/16541 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி-பா-20<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: HNDA, Cashier (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16528 | பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16542 |
| பிறப்பு: 1985- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>6இல்சூரிசெவ்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்-O/L, Driver<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16529 | பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBA, MA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16543 |
| பிறப்பு: 1980- இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>1இல் செவ்<br>கி-பா-53 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Supervisor<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/16530 | பிறப்பு:2002-இந்து<br>நட்சத்திரம்-அத்தம்<br>4இல்சூரிசெவ்<br>கிபா-04<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, company (pvt)<br>தொ.இ: G/16546 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டுமே


## இன்று ஒரு தகவல் 541



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புகையும் போகியும்

ஒரு சின்னப் பையன் தெருவிலே ஒரு டயரை போட்டு கொளுத்திக் கொண்டு இருந்தான்.

ஏன் தம்பி இப்படி செய்கிறாய் என்று கேட்டேன்.

உங்களுக்குத் தெரியாதா சார். இன்றைக்கு டயர் கொளுத்த வேண்டிய நாள் என்றான்.

அவன் சொன்னது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

வேண்டாததைப் போக்க வேண்டிய நாள் இது. ஆனால் பல பேர் வேண்டாததை விலைக்கு வாங்குகிற நாளாக இதை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ஆமாம்.

டயரைக் கொளுத்தினால் என்ன ஆகும் தெரியுமா?

அதிலே உள்ள கந்தகம் காற்றிலே உள்ள தண்ணீரோடு சேர்ந்து கந்தக அமிலமாக மாறும், நைட்ரஜன் அதே மாதிரி நைட்ரிக் அமிலமாக மாறும். நம் நுரையீரலிலே கரி படிந்துபோய் மூச்சு சம்பந்தப்பட்ட வியாதியெல்லாம் வரும்.

டயரை கொளுத்துவது இருக்கிறதே அது காற்றையும் கெடுக்கிறது. நிலத்தையும் கெடுக்கிறது.

அந்தக் காலத்திலேயெல்லாம் அறுவடை முடிந்தவுடனே வேண்டாத குப்பை கூளங்களை வயலிலேயே போட்டு எரிக்கிறது வழக்கம். அது மூலமாக சாம்பல் சத்து மண்ணுக்குக் கிடைக்கும். அடுத்தபடியாக விளைகின்ற பயிருக்கு அது உரம்.

காரணத்தோடு ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்றைக்கு என்ன ஆனது?

எதையாவது தெருவிலே போட்டுக் கொளுத்த வேண்டிய நாள் இது என்று நினைக்க ஆரம்பித்து விட்டோம். கொளுத்துவதற்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனாலே பழைய டயரை எடுத்துக் கொளுத்த ஆரம்பித்து விட்டோம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிலே அக்கறை உள்ளவர்கள் எல்லாம் இன்றைக்கு டயர் கொளுத்துவதைப் பார்த்து ரொம்பக் கவலைப் படுகிறார்கள்.

டயர் கொளுத்துவது நம்மைச் சுற்றி விஷத்தை உண்டாக்குவது மாதிரி! அதனாலே அந்த கெட்ட பழக்கத்தை விட்டுவிடுவது நல்லது! சுகாதாரத்துக்கும் நல்லது. புகையும் பனியும் சேருகிறது என்று வையுங்கள். பார்வை தெளிவாக இருக்காது, கண்எரியும், வாயெல்லாம் அமிலச்சுவை. இது ரொம்பத் தீவிரமாக ஆனது என்றால் உயிருக்கே ஆபத்து!

*1952 டிசம்பரிலே லண்டனிலே இதனாலே 5000 பேர் வரைக்கும் இறந்துப் போனதாக ஒரு புள்ளி விபரம்.*

(Ref: International Encyclopaedia of Ecology and Environment Air Pollution)

கலிஃபோர்னியாவிலே சில தொழில்கூடங்களிலே டயரை எரிபொருளாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். நச்சுப் புகை வெளியேற ஆரம்பித்தது.

மக்கள் அதை எதிர்த்துப் போராட ஆரம்பித்தார்கள். ஒன்றரை வருடம் போராடினார்கள்.

*1994இல் நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடர்ந்தார்கள்.* மக்களுக்கே வெற்றி. எந்தத் தொழிற்சாலையும் டயரைக் கொளுத்தக் கூடாது என்று தடை உத்தரவு போட்டது நீதிமன்றம்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு (இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்) சென்னையிலேயே என்ன ஆனது தெரியுமா? நிறைய புகையும் பனியும் கலந்து நிலமே தெரியாத அளவுக்கு ஆகிவிட்டது.

வந்த விமானம் எல்லாம் இறங்க முடியாமல் திரும்பிப் போக வேண்டியதாகிப் போனது.

காலை 9 மணி வரைக்கும் போக்குவரத்தையே நிறுத்தி வைக்கின்ற மாதிரி ஆகிவிட்டது. இந்தோனேஷியாவிலே நடந்த கதை தெரியுமா?

*1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் காடு எரிந்ததினாலே வான மண்டலம் புகையாகிப் போனது, வந்துக்கொண்டிருந்த விமானத்துக்கு வழி தெரியவில்லை, இந்தோனேஷிய விமானம் அது. எதிலோ மோதி 292 பேர் பலி! இன்றைக்கு நாம் சுற்றுச் சூழலை காப்பாற்றவில்லை என்றால் எதிர்காலத்திலே நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது!*

ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு நடந்தது. ஒரு நிபுணர் எழுந்துப் பேசினார்:

நண்பர்களே இதே மாதிரி போய்க்கொண்டிருந்தோம் என்றால் எதிர்காலத்திலே மக்கள் எல்லோரும் கழிவு நீரைத்தான் குடிநீராக மாற்றிச் சாப்பிட வேண்டியிருக்கும் என்றார்.

இது கவலைக்குரிய விடயம்தான் என்றார் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர். "நான் கவலைப் படுவது இதற்காக இல்லை" என்றார் அவர்.

"வேறு எதற்காக?" என்றார் இவர்.

"எதிர்காலத்திலே குடிநீராக மாற்றுவதற்காக நமக்குத் தேவையான அளவுக்குக் கழிவுநீர் கிடைக்குமா? என்பதுதான் என்னுடைய கவலை" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 20)

# வீட்டுக்கட்டுமானத்தில் Precast தொழில்நுட்பம் (I)




**01. அறிமுகம்**

இன்றைய சூழலில் வீடு கட்டுவது ஒரு பெரிய முதலீடாக மாறியுள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை, காலநிலை மாற்றங்களால் ஏற்படும் தாமதங்கள் போன்றவை பொது மக்களை சிரமத்திற்கு உள்ளாக்குகின்றன. இந்நிலையில், வேகமாகவும் தரமாகவும் செலவைக் கட்டுப்படுத்தியும் வீடு கட்ட உதவும் ஒரு நவீன தீர்வாக Precast தொழில்நுட்பம் கருதப்படுகிறது.

இந்த தொழில்நுட்பம் பல முன்னேற்ற நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நமது நாட்டிலும் இது மெதுவாக வளர்ச்சி பெற்று வருகிறது. ஆனால் பொதுமக்களிடம் இதற்கான விழிப்புணர்வு இன்னும் குறைவாகவே உள்ளது.

**02. Precast தொழில் நுட்பம் என்றால் என்ன?**

Precast என்பது "முன்கூட்டியே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் கூறுகள்" என்று பொருள். பாரம்பரியமாக கட்டடக் கூறுகள் கட்டுமானத் தளத்திலேயே கொங்கிரீட் ஊற்றி உருவாக்கப்படுகின்றன (Cast in situ முறை). ஆனால் Precast முறையில், slab, beam, column, wall panel போன்ற கூறுகள் தொழிற்சாலையில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் அவை கட்டுமானத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டு பொருத்தப்படுகின்றன.

இது தொழில்நுட்ப ரீதியாக திட்டமிடப்பட்ட மற்றும் தரக் கட்டுப்பாடு செய்யப்பட்ட முறை என்பதால், கட்டடத்தின் உறுதித் தன்மையை உறுதி செய்ய முடிகிறது.

**03. எந்த கட்டமைப்புகளுக்கு பயன்படுத்தலாம்?**

Precast தொழில்நுட்பம் வீட்டு கட்டுமானத்தில் பல கூறுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது:

- Slab (தளம்) - மாடித்தளம் மற்றும் தரைத்தளம்
- Beam (தாங்குக் கம்பி)
- Column (நிலைத்தூண்)
- Staircase (படிக்கட்டு)
- Compound wall (சுற்றுச் சுவர்)
- Wall panels(சுவர் பலகைகள்)

இவை தனி வீடுகள், குடியிருப்புகள், பள்ளிகள், அலுவலகங்கள் போன்ற கட்டடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

**04. Precast எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?**

முதலில் கட்டடத்தின் முழுமையான Structural Design தயாரிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் தொழிற்சாலையில் கூறுகள் தயாரிக்கப்படுகின்றன.

- Foundation வேலைகள் தளத்தில் செய்யப்படும்.
- Precast column-கள் crane மூலம் நிறுவப்படும்.
- Beam-கள் column மீது பொருத்தப்படும்.
- Slab-கள் மேலிருந்து அமைக்கப்படும்.
- Joint பகுதிகளில் grout அல்லது concrete நிரப்பி உறுதிப் படுத்தப்படும்.

இந்த முறையில் கட்டுமானம் வேகமாகவும் துல்லியமாகவும் நடைபெறும்.

**05. மக்களின் தயக்கம் ஏன்?**

புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பொதுவாக மக்களிடம் சில சந்தேகங்கள் இருக்கும். Precast பற்றியும் சில தவறான எண்ணங்கள் காணப்படுகின்றன:

- "இது பாரம்பரிய RCC போல பலமாக இருக்குமா?"
- "நீண்ட காலம் நீடிக்குமா?"
- "மாற்றங்கள் செய்ய முடியாதா?"
- "செலவு அதிகமா?"

இவை பெரும்பாலும் தகவல் குறைபாடு மற்றும் அனுபவமின்மையால் ஏற்படும் எண்ணங்களாகும். உண்மையில், சரியான பொறியியல் வடிவமைப்பு மற்றும் தரமான தயாரிப்புடன் Precast கட்டடங்கள் மிகுந்த உறுதியுடனும் நீடித்த தன்மையுடனும் இருக்கும்.

**06. Precast தொழில்நுட்பத்தின் நன்மைகள்**

**1. வேகமான கட்டுமானம்**

கட்டடக் கூறுகள் முன்கூட்டியே தயாராக இருப்பதால் தளத்தில் வேலை நேரம் குறைகிறது. 6-8 மாதங்கள் எடுக்கும் வீடு 3-4 மாதங்களில் முடிக்க முடியும்.

**2. தரக் கட்டுப்பாடு**

தொழிற்சாலையில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் தயாரிப்பதால், concrete mix, curing, finishing ஆகியவை தரநிலைக்கு ஏற்ப இருக்கும்.

**3. தொழிலாளர் செலவு குறைவு**

தளத்தில் அதிகமான தொழிலாளர்கள் தேவையில்லை.

**4. பொருள் வீணாக்கம் குறைவு**

Concrete மற்றும் formwork வீணாகும் அளவு குறைகிறது.

**5. காலநிலை பாதிப்பு குறைவு**

மழைக்காலம் போன்ற காரணங்களால் தாமதம் குறைகிறது.

**07. விரைவாக வீடு கட்டுவதில் இதன் பங்கு**

சாதாரண முறையில் ஒரு வீடு கட்ட 300 நாட்கள் ஆகிறது என்றால், Precast முறையில் வெறும் 90 நாட்களில் நீங்கள் குடிபுகலாம். காலம் பொன் போன்றது என்பவர்களுக்கு இதுவே சிறந்த தேர்வு.

**08. Cost Effective கட்டுமானத்தில் Precast**

Precast முறையில் ஆரம்பத்தில் சில உபகரண செலவுகள் (crane, transport) இருக்கலாம். ஆனால் மொத்த செலவை கணக்கிட்டால்:

- Formwork செலவு குறைவு
- தொழிலாளர் செலவு குறைவு
- நேரச் சேமிப்பு மூலம் வட்டி செலவு குறைவு
- Material wastage குறைவு

சரியான திட்டமிடலுடன் Precast முறை பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக அமையும்.

**09. தீமைகள் மற்றும் தீர்வுகள்**

**சவால்கள்**

- ஆரம்ப கட்ட முதலீடு அதிகம்
- Design மாற்றம் பின்னர் கடினம்
- Transport மற்றும் crane தேவைகள்

**தீர்வுகள்**

- ஆரம்பத்திலேயே முழுமையான திட்டமிடல்
- அனுபவமுள்ள Structural Engineer ஆலோசனை
- தரமான Precast தயாரிப்பு நிறுவனத்தைத் தேர்வு செய்தல்
- Quality assurance பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்

**10. முடிவுரை**

Precast தொழில்நுட்பம் என்பது நவீன காலத்தின் ஒரு முக்கிய கட்டுமான முன்னேற்றமாகும். வேகமான, தரமான மற்றும் பொருளாதார ரீதியாக பயனளிக்கும் இந்த முறை, எதிர்கால வீட்டு கட்டுமானத்தில் முக்கிய இடம் பெறும்.

பொதுமக்கள் புதிய தொழில்நுட்பங்களைப் பற்றி விழிப்புணர்வுடன் இருந்து, தகுந்த நிபுணர்களின் ஆலோசனையுடன் முடிவெடுத்தால், பாதுகாப்பான மற்றும் நீடித்த வீடுகளை கட்ட முடியும்.

"வீடு என்பது ஒரு கனவு மட்டுமல்ல - சரியான தொழில்நுட்பத்துடன் கட்டப்படும் போது அது தலைமுறைகள் நீடிக்கும் ஒரு முதலீடு."

**இலங்கை பொறியியலாளர் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

17.02.2026
மாசி 05, செவ்வாய்க்கிழமை
அமாவாசை முன்னிரவு 6.26 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 10.15 மணிவரை
சுப நேரம் -11.03-12.33 மணிவரை
இராகு காலம் 3.33-5.03 மணிவரை

சந்திராஷ்டமம்
புநர்பூசம்,பூசம்.

வளவன்

**மேஷம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு

**துலாம்** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும் செய் தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்** பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்** இறை சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம் , சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கோபமும் பொறாமையும் மனிதனை கொன்று விடும் சக்தியை படைத்தது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 980





"பார்த்தாயா, நண்பா! பழுவூர்ராணி நமது வீர தீரத்தைக் குறித்து அவ்வளவு பெருமதிப்பு வைத்திருக்கிறார். நானும் வரவேண்டுமா? நீ மட்டும் போய் வருகிறாயா?" என்றார் கரிகாலர்.

"அல்லது மணிமேகலையை அனுப்பலாமா?" என்றாள் நந்தினி.

"மணிமேகலையை அனுப்பலாம் ஆனால் அந்தப் பெண் ஒருவேளை காயம் பட்ட புலிக்கும் அஞ்சனம் தடவிப் பிழைக்க வைத்துக் கொண்டு வந்து விட்டால் என்ன செய்கிறது?" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்றார் இளவரசர்.

"காயம்பட்ட புலியின் தலையை வெட்டிக் கொண்டு வந்து பழுவூர் அரசியின் காலடியில் சமர்ப்பிக்கலாமா என யோசிக்கிறேன். அப்போதாவது அவர் திருப்தியடைகிறாரா, பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு வந்தியத்தேவன் விடுவிடு என்று நடந்தான்.

"அந்த மூடன் சொன்னதைக் கேட்டீர்களா? காயம்பட்ட புலியின் தலையை வெட்ட ரொம்ப வீரம் வேண்டுமா?" என்று கரிகாலர் கேட்டுக் கொண்டே சிரிக்கத் தொடங்கியவர், நந்தினியின் முகத்தைப் பார்த்து விட்டுப் பாதியில் சிரிப்பை நிறுத்தினார்.

"அதைப் பற்றித் தாங்கள் அல்லவோ அபிப்பிராயம் சொல்ல வேண்டும்?" என்றாள் நந்தினி.

கரிகாலர் தேகமெல்லாம் சிலிர்த்தது. தழதழத்த குரலில், "நந்தினி! கந்தமாறனிடம் நீ ஓலை கொடுத்து அனுப்பினாய். அதனாலே தான் நான் இவ்விடம் வந்தேன். இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேன்" என்றார்.

"என் வேண்டுகோளுக்கு இத்தனை காலங்கழித்தாவது மதிப்புக் கொடுத்தீர்களே! மிக்க வந்தனம்!" என்றாள் நந்தினி.

"சென்று போனதையெல்லாம் நீ மறந்து விட்டாய் என்று நினைத்தேன். அதனாலே தான் ஓலை அனுப்பினாய் என்று கருதினேன்"

"சென்றதையெல்லாம் மறக்க முடியுமா, ஐயா! நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா?"

"மறக்க முடியாதுதான் என்னாலும் மறக்க முடியவில்லை! நீ கண்ணும் கண்ணீருமாக நின்று என்னிடம் ஒரு வரம் கேட்டாய். அதை நான் கொடுக்கவில்லை. அந்தச் சமயம் ஏதோ வெறி கொண்டிருந்தேன். அதையெல்லாம் நான் இன்னமும் மறக்கவில்லைதான். ஆனால் எதற்காக ஓலை கொடுத்து அனுப்பினாய்? எதற்காக என்னை இவ்விடம் வரச் சொன்னாய்?" என்று கேட்டார் இளவரசர்.

"ஐயா! தஞ்சாவூருக்குத் தாங்கள் மூன்று ஆண்டுகளாக வரவில்லை. நோய்ப்பட்டிருக்கும் தங்கள் தந்தையைப் பார்க்கவும் வரவில்லை."

"அவர் எனக்கு மட்டும் தந்தை அல்ல, நந்தினி!"

"ஆம், இளைய பிராட்டிக்கும் தந்தைதான்! பொன்னியின் செல்வருக்கும் தந்தைதான்! ஆயினும் தங்களைப் பார்க்காதது தான் தங்கள் தந்தைக்குப் பெருங்குறையாக இருக்கிறது. தாங்கள் வராமைக்குக் காரணம் நான் என்று சக்கரவர்த்தியிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். அதனால் அவர் என்னைப் பார்ப்பதே கிடையாது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கற்றபடி நிற்க



பஞ்ச பாண்டவர்களுள் மூத்தவராகிய தருமருக்குப் பள்ளி செல்லும் பருவம் வந்தது. அவரை முதலாம் வகுப்பில் சேர்த்தார்கள்.

முதல் நாள் ஆசிரியர் பாடத்தைத் தொடங்கினார். "அறம் செய்ய விரும்பு என்பதன் பொருள் யாருக்காவது தெரியுமா?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்கள் யாருமே பதில் பேசவில்லை.

உடனே ஆசிரியர், "தருமத்தை ஒவ்வொருவரும் விருப்பத்துடன் செய்ய முயலவேண்டும் என்பது தான் அதன் பொருள். விளங்குகின்றதா?" என்று கேட்டார். எல்லோரும் தலையாட்டினார்கள்.

ஆனால் அதைக் கேட்ட தருமரோ வகுப்பை விட்டு எழுந்து வெளியே வந்தார். அதன் பிறகு வகுப்பிற்கு வரவில்லை. மூன்றாண்டுகள் கழிந்தன. திடீரென்று ஒரு நாள் தருமர் மீண்டும் வகுப்பிற்குள் நுழைந்தார்.

ஆசிரியரைப் பார்த்து, "அடுத்த பாடத்தைத் தொடங்குங்கள். நான் படிக்க வேண்டும்" என்று பணிவுடன் கேட்டார்.

"என்ன அடுத்த பாடமா? உன்னுடன் படித்தவர்கள் எல்லாம் இப்பொழுது நான்காம் வகுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் முதல் வகுப்பிலேயே "ஆத்திசூடி முழுமையும் படித்து விட்டார்கள்.

இப்பொழுது நீ வந்து அடுத்த பாடம் நடத்துங்கள் என்கிறாய். மூன்றாண்டுகளாக நீ என்ன செய்தாய்? அதைச் சொல்" என்று கோபத்துடன் கேட்டார் ஆசிரியர்.

"ஐயா! தாங்கள் "அறம் செய விரும்பு" என்று சொல்லிக் கொடுத்தீர்கள். அறத்தைச் செய்ய என் உள்ளத்தில் விருப்பம் ஏற்படுகிறதா என்று மூன்றாண்டுகளாகப் பயிற்சி எடுத்துக் கொண்டேன்.

இப்பொழுது உண்மையிலேயே நான் அறத்தைச் செய்ய விருப்பத்துடன் உள்ளேன், ஆகவே அடுத்த பாடத்தைக் கேட்க நான் இங்கு வந்தேன்" என்றார் தருமர்.

இதைக் கேட்டதும் ஆசிரியர் அவரைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது எதுவென தேர்ந்தெடுக்கத் தெரிந்து விட்டால் தேவையற்றதும், பரபரப்பும் தானாகவே விலகிவிடும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றங்களைக் குறைக்காத மரண தண்டனைத் தீர்ப்புகள்

தண்டனைகள் இரண்டு நோக்கத்தை உள்ளடக்கி வழங்கப்படுகின்றன.

அதில் ஒன்று குற்றம் இழைத்தவர் அதற்கான தண்டனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது. மற்றையது குற்றம் செய்தவருக்கு வழங்கப்படுகின்ற தண்டனை ஏனையவர்களுக்குப் பாடமாக அமைய வேண்டும்.

இவ்விதம் இரண்டு நோக்கம் கருதி வழங்கப்படுகின்ற தண்டனையானது, நம் நாட்டில் குற்றம் செய்தவருக்கு தண்டனை வழங்குதல் என்பதைத் தவிர, வழங்கப்படுகின்ற தண்டனை மற்றவர்களுக்குப் பாடமாக அமையவில்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அதாவது, குற்றம் செய்தால் அதற்குத் தண்டனை நிச்சயம் என்ற உண்மையை ஒரு தரப்பினர் உணர்ந்து கொள்வதில்லை.

உண்மையில் உலகில் கணிசமான நாடுகள் அதிகபட்ச தண்டனைகள் மூலமே குற்றச் செயல்களைத் தங்கள் நாடுகளில் கட்டுப்படுத்தியுள்ளன.

ஆம், தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்ற அச்சம் காரணமாக மக்கள் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதுடன் சட்டங்களை மதிக்கவும் அதனைப் பின்பற்றவும் பழகிக் கொள்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கப்படுகின்ற தண்டனை என்பது மிகவும் கொடூரமானது. அங்கு குற்றம் செய்தவர் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதை விட, குற்றத்துக்கான தண்டனை எத்துணை கொடூரமானது என்பதை ஏனையவர்கள் தெரிந்து கொண்டு; குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதே முதன்மைக்குரியது.

இதன் காரணமாக குற்றவாளிகளுக்கான தண்டனை பொதுவெளியில் வைத்து வழங்கப்படுகிறது.

இவ்வாறாக குற்றங்கள் மற்றும் சட்டங்களை மீறுவதற்காக தண்டனைகள் வழங்கப்படுகின்ற போதிலும் நம் நாட்டைப் பொறுத்தவரை தண்டனைகள் குற்றங்களைக் களையவில்லை என்ற உண்மையை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

ஆம், அண்மைக்காலமாக நீதிமன்றங்கள் கொலைக் குற்றங்களுக்காக வழங்குகின்ற மரண தண்டனைகள் அதிகரித்துள்ளன. இருந்தும் கொலை, போதைவஸ்து கடத்தல் ஆகிய மிக மோசமான குற்றங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன எனும் போதுதான், எங்கோ சிக்கல் உண்டு என்பது தெரிய வருகிறது.

ஆம், பொதுவில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்காக நீதிமன்றங்கள் எடுக்கக்கூடிய நீண்ட காலம் என்பது குற்றத்திற்கான தண்டனையைப் பெறுமதியற்றதாக்குகிறது.

அதாவது, பாதிக்கப்பட்டவர்கள் மன ஆறுதல் அடைகின்ற அளவுக்கு குற்றம் இழைத்தவர்களுக்கு உடனுக்குடன் தண்டனை வழங்கப்படுவதில்லை.

உதாரணத்துக்கு ஒரு கொலைக் குற்றவாளிக்கு 14 ஆண்டுகளுக்குப் பின்னர் மரணதண்டனை விதிக்கப்படுகிறது எனும் போது, குறித்த கொலைக் குற்றவாளி பிணை வழங்கப்பட்டதிலிருந்து மக்கள் சமூகத்தில் சாதாரணமாக நடமாடுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

கொலை செய்து விட்டு சுதந்திரமாக –மகிழ்வாக – இன்னும் ஒரு படி கர்வத்துடன் நடமாடுவதான தோற்றப்பாட்டை மக்கள் சமூகத்தில் ஏற்படுத்தி விடுகிறது.

இந்நிலைமையே "மரண தண்டனைகள் குற்றத்தை குறைப்புச் செய்யவில்லை" என்பதாக அமைகிறது.

## இலங்கைத் தமிழர்கள் தொடர்பில்

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கை வரவேற்கத்தக்கது - நாமல் எம்.பி

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முகாம்களில் உள்ள 89,000 இலங்கையர்களுக்கு இந்தியக் குடியுரிமை அல்லது நீண்ட கால விசாக்களை வழங்குமாறு விடுத்த கோரிக்கையை வரவேற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இது குறித்த சில முக்கிய அவதானிப்புகளையும் முன்வைத்துள்ளார்.

பல தசாப்தங்களாக முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான அந்தஸ்து மற்றும் கண்ணியமான வாழ்வைப் பெற்றுக்கொடுக்க இக் கோரிக்கை ஒரு நம்பிக்கையை அளிக்கிறது.

எனினும், கடந்த காலங்களைப் போலவே தேர்தல் காலங்களில் இத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர், இக்கோரிக்கை தேர்தல் நோக்கங்களுக்காக அன்றி, தூய மனிதாபிமான அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்.

30 ஆண்டுகால யுத்தம் முடிவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தமிழக முகாம்களில் இருந்த இலங்கையர்கள் சுயமாகவும் பாதுகாப்பாகவும் தாயகம் திரும்புவதற்குத் தங்களது அரசாங்கம் தொடர்ச்சியாக வழி வகை செய்ததாக அவர் நினைவு கூர்ந்தார்.

சவாலான சூழலிலும் அவர்கள் தாயகத்தில் கௌரவமாக வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது தமிழக முகாம்களில் இருந்து தாயகம் திரும்ப விரும்பும் இலங்கையர்களுக்குப் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்படுவதாகத் தகவல்கள் வருவதாகக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, இது கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை அரசு இது குறித்து ஆராய்ந்து, நாடு திரும்ப விரும்புவோருக்குத் தடையின்றி வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையர்கள் இந்தியாவில் ஏதிலிகள் முகாம்களில் தொடர்ந்து கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் இலங்கைக்குத் திரும்பி உரிமையுள்ள பிரஜைகளாக வாழ முடியும்.

இந்த 89,000 இலங்கையர்களும் எமது நாட்டு மக்கள் எனக் குறிப்பிட்ட அவர், இலங்கை மற்றும் இந்திய மத்திய அரசுகளும், தமிழக அரசும் இந்த உணர்வுபூர்வமான மனிதாபிமான விவகாரத்தை அரசியலாக்காமல், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நிரந்தரத் தீர்வை நோக்கி இணைந்து செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார். (ம-7)

## பிரஜா சக்திக்கு எதிராக

# யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரஜா சக்தி திட்டத்திற்கு எதிராக யாழ்ப்பாண மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தலைமையில் மாநகர சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதி முதல்வர் இ.தயாளனால் பிரஜா சக்திக்கு எதிரான பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

குறித்த பிரேரணைக்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்திய நிலையில், ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-7,33)

## வல்லிபுரத்தில்

# பயணிகளை ஏற்றிச்சென்ற ஆட்டோ திடீரென தீப்பற்றியது

(வல்லிபுரம்)

பயணிகளுடன் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று மருதங்கேணி - பருத்தித்துறை வீதியில் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீதியால் பயணித்த முச்சக்கர வண்டியின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

அதனை அவதானித்த குறித்த வீதியால் பயணித்தோர் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்க்களை பாதுகாப்பாக மீட்டதுடன் தீ பரவலை கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ம-7)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்குள் குழப்பம் விளைவித்த 9 பேர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குள் புகுந்து குழப்பம் விளைவித்த ஒன்பது பேர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை பார்வையிட அனுமதிக்குமாறு அங்கு காவலுக்கு நின்ற காவலாளியிடம் சடலத்தைக் காட்டுமாறு கோரி குறித்த வைத்தியசாலையின் பிரேத அறையின் கதவு, கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் ஒன்பது பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,315)

## இயேசுவின் திருப்பாடுகள்

# நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் "கலைஞான சுரபி" தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருட்தந்தை சா.ம.செல்வரட்ணம், அ.ம.தி( கரவையூர்ச் செல்வம்) அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைக்கவுள்ளார்.

எனவே பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 26ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையிலான நான்கு நாட்களுக்கு " காவிய நாயகன்" என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

**24**

என்.சொக்கன்

உள்ளூரில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், அமெரிக்காவின் பார்வையில் தாங்கள் ஒரு சம போட்டியாளர்களாக கருதப்படவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம்.

இதற்காக, அவர்கள் தங்களுடைய பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, இராணுவம், பாதுகாப்பு நடவடிக்கைகளைப்பற்றிய அனைத்து விவரங்களையும் வேண்டுமென்றே மறைத்தார்கள். அல்லது போலி ஒற்றர்கள், டபுள் ஏஜென்ட்களைப் பயன்படுத்தி, வேண்டுமென்றே தவறான தகவல்களை சிஐஏவிடம் கசியச்செய்து பயமுறுத்தினார்கள்.

இதனால், சிஐஏவின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது. சோவியத் யூனியனிடம் நமக்குச் சேதம் உண்டாக்கக்கூடிய ஆயுதங்கள் உண்டா, இல்லையா?" என்று அமெரிக்க ஆட்சியாளர்கள் கேட்டால், பதில் சொல்லமுடியாமல் பேந்தப் பேந்த விழிக்க வேண்டியிருந்தது.


சரி போகட்டும், சோவியத் யூனியனின் வளர்ச்சி எப்படி இருக்கிறது? மாதம் மும்மாரி பெய்கிறதா? எல்லோரும் சுகமாகச் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டு எப்போது அமெரிக்காவைத் தாக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களா? அல்லது பசி, பட்டினி என்று உள்ளூர்ப் பிரச்சினைகளில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்களா? சோவியத் பொருளாதாரம் வளர்கிறதா? அல்லது சரிந்து கொண்டிருக்கிறதா? இதற்கும் சிஐஏவிடம் சரியான பதில் இல்லை. எல்லா வெளிநாடுகளிலும் வெற்றிகரமாகச் செயற்பட்டே பழக்கப்பட்ட அவர்களுக்கு, சோவியத் யூனியனில் மட்டும் முழி பிதுங்கியது. அடிப்படைத் தகவல்களைக்கூடத் திரட்ட முடியாமல் திணறினார்கள்.

ஆனால், இதையெல்லாம் வெளியே சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? "ஸாரி. தகவல் கிடைக்கலை" என்று சொன்னால் காரித்துப்பமாட்டார்களா? அதனால் சிஐஏ என்ன செய்தது.

சோவியத் யூனியன்பற்றித் தங்களுக்குக் கிடைத்த மிகச் சில தகவல்களோடு, கொஞ்சம் மசாலா சேர்க்கத் தொடங்கினார்கள். பத்து என்றால் நூறு, ஆயிரம் என்றால் இலட்சம் என்று எதையும் கொஞ்சம் மிகைப்படுத்தித் தர ஆரம்பித்தார்கள்.

இதன்மூலம், சோவியத் யூனியனின் இராணுவ, ஆயுத பலம்பற்றி அமெரிக்காவுக்குத் தொடர்ந்து ஒரு தவறான பிம்பம் கிடைத்துக் கொண்டிருந்தது. அவர்களுடைய பலம் நம்மைவிடப் பல மடங்கு அதிகம் என்கிற நினைப்பால், தங்களது பாதுகாப்புக்காகவும், ஆயுத விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகவும் முன்பை விடக் கூடுதலாகச் செலவிடத் தொடங்கியது அமெரிக்கா.

இப்படி அமெரிக்கர்கள் சோவி



யத்தின் வளர்ச்சியை நினைத்துக் கவலையில் இருந்தபோது, நிஜமாகவே சோவியத் யூனியனுக்குள் அப்படி என்னதான்நடந்து கொண்டிருந்தது?

அப்போது சிஐஏவுக்கும் தெரியாத அந்த ரகசியம், மிகத் தாமதமாகதான் உலகுக்குத் தெரியவந்தது. கடுமையான பொருளாதார வீழ்ச்சியால் திணறிக் கொண்டிருந்தது சோவியத் யூனியன்.

சோவியத்தின் சரிவுக்குக் காரணங்கள் என்ன என்பதெல்லாம் இந்தப் புத்தகத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள். அந்தக் கூட்டமைப்பு அப்படிச் சரிந்து கொண்டிருப்பதை சிஐஏ கவனிக்காமல் தவறவிட்டதுதான் இங்கே முக்கியம்.

சிஐஏவின் சரித்திரத்தில் மிகப் பெரிய சறுக்கல் இது. அன்றைய சூழலில் அமெரிக்காவின் முக்கியமான எதிரி என்று பார்த்தால், அது சோவியத் யூனியன்மட்டும்தான். அவர்கள் அடுத்து என்ன செய்து விடுவார்களோ என்று அமெரிக்கர்கள் பதறிக்கொண்டிருக்கையில், சோவியத் அவர்களை எதிர்க்கப் பலமில்லாமல் விழுந்து கொண்டிருக்கிறது. அதை சிஐஏ கவனிக்கத் தவறிவிட்டது.

இதனால் கடைசிவரை சோவியத் பற்றி அமெரிக்கா கொண்டிருந்த லேசான அச்சம் குறையவே இல்லை. அவர்களுடைய அச்சத்தைப் போக்கி தைரியம் கொடுத்திருக்கவேண்டிய சிஐஏ, அதற்கு நேரெதிராகச் செயற்பட்டுச் சொதப்பியிருந்தது.

சோவியத் யூனியனின் இராணுவ ஆயுத பலத்தை மிகைப்படுத்திக் கூறியது கூடப்பரவாயில்லை. அவர்களுடைய பொருளாதார வீழ்ச்சியை சிஐஏ கவனிக்காமல் விட்டது தான் மிகப் பெரிய தவறாகிவிட்டது. கடைசிவரை, அவர்களுடைய வளர்ச்சி விகிதம் நன்கு இருப்பதாக தான் அமெரிக்காவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது சிஐஏ.

சோவியத் யூனியனின் பொருளாதாரச் சரிவுபற்றி அமெரிக்காவுக்கு முன்பே தெரிந்திருந்தால், அவர்கள் வலுவான அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக் கக்கூடும். யார் கண்டது. சோவியத்தை உடைத்துச் சிதறடிக்கிற கைங்கர்யத்தை அமெரிக்காவேகூட நிகழ்த்தி வைத்திருக்கலாம்.

சிஐஏவின் புண்ணியத்தில், அந்த அசம்பாவிதம் நடக்கவில்லை. சோவியத் யூனியன் தானாகவே உடைந்தது. பல நாடுகளாகப் பிரிந்தது.

இத்தனை ஆண்டுகளாக, அமெரிக்காவுக்குப் பெரும் சவால் கொடுத்துக்கொண்டிருந்த ஓர் எதிரிக் கூட்டமைப்பு, இப்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

இதைச் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டிய அமெரிக்கா, கொஞ்சம் திகைப்போடுதான் இந்தச் சூழலை எதிர்கொண்டது. இதற்கு முழுக்காரணம், சிஐஏவின் ஒன்றரைக் கண் பார்வைதான்.

அதுவரை, "சோவியத் யூனியன் பரம சௌக்கியமாக இருக்கிறது. நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த செவ்வாய்க்கிழமை சாயங்காலம் கொழுத்த ராகுகாலத்தில் அவர்கள் நம்மைத் தாக்கினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை" என்கிற ரேஞ்சுக்கு ரிப்போர்ட்கள் கொடுத்துக் கொண்டிருந்த சிஐஏவுக்கு, சோவியத்தின் திடீர் சரிவு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

அந்த திகைப்பிலிருந்து அவர்கள் விலகுவதற்குள், அடுத்த அதிர்ச்சி. சோவியத் யூனியன்தான் இல்லை என்றாகிவிட்டதே, இனிமேல் எதற்கு சிஐஏ? என்று அமெரிக்கர்களே பேசத் தொடங்கினார்கள். இத்தனை ஆண்டுகளாக, மக்கள் வரிப் பணத்தை சிஐஏவுக்குச் செலவழித்ததெல்லாம் போதும், மரியாதையாக அதை இழுத்து மூடுங்கள் என்று கோரிக்கைகள் எழுந்தன.

பெரும்பான்மை அமெரிக்கர்களின் கருத்து. சிஐஏ இனிமேல் தேவையில்லை என்பதாகதான் இருந்தது. ஆனால், இப்படிச் சொன்னவர்கள் யாரும், சிஐஏவின் செயற்பாடுகளைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

சோவியத்திற்கும் அமெரிக்காவுக்கும் பனிப்போர் தொடங்கிய அதே காலகட்டத்தில்தான், சிஐஏ பலம் பெற ஆரம்பித்திருந்தது. ஆனால் அதற்காக, அவர்கள் சோவியத் யூனியனை உளவு பார்ப்பதை மட்டுமே தங்களுடைய முழு நேர வேலையாக எடுத்துக் கொள்ளவில்லை. சிஐஏவின் பல இலக்குகளில் ஒன்று, அதுவும் முக்கியமான ஒன்று சோவியத் யூனியன். மற்றபடி, பனிப்போர் உச்சத்தில் இருந்த போதுகூட அவர்கள் சோவியத்தை உளவு பார்ப்பதற்குத் தங்களின் நேரம், பணத்தில் இருபது சதவிகிதத்துக்குமேல் செலவிட்டது இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 வயது...

மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் அகிலன் (வயது - 21) என்பவரே உயிரிழந்தவராவார். (ம-7,315)

## க.பொ.த...

தாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 3,545 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளது. (ம-7)

## கோப்பாயில்...

செல்லத்துரை செல்வரஞ்சன் (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபருக்கும் பிறிதொரு நபருக்கும் இடையில் நீண்டகாலமாக காணி பிரச்சினை ஒன்று நிலவி வந்த நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை பிரச்சினை முற்றி, கைகலப்பாக மாறியுள்ளது. அதன்போது மூவர் இணைந்து தாக்குலை மேற்கொண்டதில் அந்நபர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் தாக்குதலாளிகள் மூவரையும் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை சடலத்தை மீட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவை மனித குலத்தின் நன்மைக்காகப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், ஜனாதிபதி நாளை மறுதினம் 19ஆம் திகதி விசேட உரையாற்றவுள்ளார்.

இந்தியப் பிரதமரின் தலைமையில் ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த சர்வதேச மாநாட்டில் 20 நாடுகளின் அரச தலைவர்களும் 45க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த இந்திய விஜயத்தின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## சர்வதேச...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று (16) பிற்பகல் இலங்கைக்கு வருகை தந்தனர்.

தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில்ஜயந்த பெர்னாண்டோ, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரதிநிதிகள் குழுவை வரவேற்றார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களையும் அதன் தாக்கத்தையும் நேரடியாகப் பார்வையிடும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத் தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நாட்டிற்கு வருகை தந்திருப்பதுடன், இன்று (17) முற்பகல் கம்பளைப் பகுதிக்கும் அவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

பின்னர், கொழும்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அனர்த்தத்துக்குப் பிறகு இலங்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் [illegible] எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கக்கூடிய உதவிகள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்படும். (ம-7)

## சட்டத்தரணி...

வையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, அவர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் கார் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக்கொண்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## காணிகளை...

கோரி, மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

மாவட்ட செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அரசாங்க அதிபரைச் சந்தித்த குழுவினர், வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் பாதுகாப்புத் தரப்பினரின் வசமுள்ள காணிகளை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி மகஜரை கையளித்தனர்.

அதேவேளை, மக்களின் காணிகள் மக்களுக்கே.. என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் பயணித்துக் கொண்டிருப்பதாகவும், சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக வலி.வடக்கில் ஒரு தொகுதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நிகழ்வொன்றில் உரையாற்றும்போது, சில அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்குகளும் காணி விடுவிப்பு தாமதிக்கக் காரணமாகஉள்ளதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## வடக்கில் இன்று முதல் மழைக்கு வாய்ப்பு

தென் வங்காள விரிகுடாவில் ஒரு காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக, இன்று (17) முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதத்தில் இத்தகைய தாழமுக்க நிகழ்வுகள் தோன்றுவது மிகவும் அரிது. இந்த மழை எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர வாய்ப்புள்ளது.

எனவே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மழை நாட்களைக் கருத்தில் கொண்டு தங்களது பணிகளைத் திட்டமிடுவது நன்று என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2026.02.16 — சீட்டிழுப்பு இலக்கம் 6107

U 7 1 1 7 6 7

அத சம்பத — U 1 7 6 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0682

### சுப தவசக்

திகதி 2026.02.16 — சீட்டிழுப்பு இலக்கம் 223

கன்னி 58 59 63 — 9507

### தன நிதானய

திகதி - 2026.02.16 — சீட்டிழுப்பு இலக்கம் - 2137

C 25 28 50 82 C

### மெகா பவர்

திகதி 16/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2455

V 19 11 14 22 79

### ஜய

திகதி 2026.02.16 — சீட்டிழுப்பு இலக்கம் 0375

M 2 5 2 1

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4349 — சீட்டிழுப்பு திகதி 16.02.2026

Y 01 06 52 68 — Y

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2026.02.16 — சீட்டிழுப்பு இலக்கம் 1416

கும்பம் 17 30 41 59 கும்பம்

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா

16.02.2026 — வெற்றி வாரம் 0815

P 8 5 4 7 6 6

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,464,363.20

### சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 3081 — சீட்டிழுப்பு திகதி 2026.02.16 — தினம் திங்கட்கிழமை

05 08 25 38 O

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,965,623.20

### சனிதா

திகதி 16.02.2026 — வெற்றி வாரம் 5242

21 24 47 71 A

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,944,301.20

### சசிரி

வெற்றி வாரம் 911 — 16.02.2026 திங்கட்கிழமை

33 45 49

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,425,680.00

### லக்ன வாசனா

சீட்டிழுப்பு வாரம் 4793 — சீட்டிழுப்பு திகதி 16.02.2026 — தினம் திங்கட்கிழமை

05 09 20 22 — ரிஷபம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,014,720.40

### கப்ருக

G 20 39 41 52 55

2257 — 16.02.2026 திங்கட்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.629,296,290.20

### அத கோடிபதி

திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2907 — சீட்டிழுப்பு திகதி 2026.02.16

03 30 56 74 O

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,431,791.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாய...

எதிர்க்கட்சிகள் மற்றும் அரசுக்கு எதிரான அமைப்புகள் இது தொடர்பில் விடுத்துள்ள கோரிக்கைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற கறுப்புக் கொடிப் போராட்டங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் நிலவும் கருத்துச் சுதந்திரத்தின் அங்கமே தவிர, அவை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது பிரிவினைவாதத்தின் மீள் எழுச்சியாகவோ கருதப்பட வேண்டியதில்லை.

இத்தகைய போராட்டங்களை மிகைப்படுத்தி அரசியலாக்குவது தேவையற்ற செயலாகும்.

மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவது அரசின் நோக்கமல்ல. எனினும், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான எல்லை நிர்ணயப் பிரச்சினைகள், சட்ட ரீதியான சிக்கல்கள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றைச் சீர்செய்வதில் அரசு தற்போது தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

முறையான சீர்திருத்தங்கள் இன்றி தேர்தலை நடத்துவது மேலதிகக் குழப்பங்களையே ஏற்படுத்தும்.

எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிரான அமைப்புகளும் மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை உருவாக்கி, அதன் மூலம் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றன. பிரிவினைவாதத்தைக் காரணமாகக் காட்டித் தேர்தல் கோருவது ஆரோக்கியமான அரசியல் கலாசாரம் அல்ல.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசு எப்போதும் விழிப்புடன் உள்ளது என்றார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5015)
076 825 7716 (ஆகாஸ்)

## வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில்

# இனந்தெரியாத நபர்களால் கரைவலை வாடிக்குத் தீ வைப்பு



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் கரைவலை வாடி தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் அமைந்திருக்கின்ற அல்பிரட் என்பவருக்குச் சொந்தமான கரைவலை வாடியை நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்கள் தீவைத்து எரித்துள்ளனர்.

இந்த வருடத்திற்கான கரைவலை தொழில் செய்வதற்கான ஏற்பாடுகள் அப்பகுதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், இனந்தெரியாதவர்களால் குறித்த வாடி எரிக்கப்பட்டுள்ளது.

வாடி எரிக்கப்பட்ட சமயத்தில் எந்தவிதமான மீன்பிடி உபகரணங்களும் வாடிக்குள் வைக்கப்படாத காரணத்தினால் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் கடந்த வருடமும் கடற்றொழிலாளரின் கரைவலை வாடி இனந்தெரியாதவர்களால் தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில்

## தமிழ் மக்களை விழிப்படைய செய்வது தொடர்பான கலந்துரையாடல்

மகாவலி அதிகார சபையின் (எல்) வலயத்தினால் செயற்படுத்தப்படவுள்ள தமிழர்களுக்குப் பாதகமான கிவுல் ஓயா நீர்த்தேக்கக் குடியேற்றத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டல்களை வழங்கி, தமிழ் மக்களை விழிப்படையச் செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.


அந்தவகையில் முல்லைத்தீவு ஊடக அமையத்தின்ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலானது மறைந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவேந்தலுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதக நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் தமிழ் மக்களுக்கு கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதக நிலைதொடர்பில் தெளிவூட்டி விழிப்படையச் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது. (ம-7)

## மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை இராசதுரை

(உரிமையாளர் – ராஜன் சைக்கிள் வேக்ஸ், மஹாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ்)



தோற்றம் 21.10.1945 மறைவு 15.02.2026

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசதுரை அவர்கள் கடந்த (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னபாக்கியம் தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ண பிள்ளை - லட்சுமி தம்பதியினரின் மருமகனும் சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் வெற்றிவேல் (வெற்றி சைக்கிள் வேக்ஸ்), நாகபூசனி (சாந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சிவபாதம் (யாழ்ப்பாணம்), அன்னபாக்கியம், மங்களேஸ்வரி, கமலாதேவி, ஆதித்தன், அமுதா, பரமசிவம் ஆகியோரின் மைத்துனரும் உமாகுமாரி (ஜேர்மனி), அமரர் உதயணன், தயாளன் (ராஜன் வீடியோ), விஜயகுமாரி, அமரர் நித்தியா, குமரன் (ஜேர்மனி), நிர்மலன் (மஹாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ்), திருமகள் (அவுஸ்திரேலியா), அமரர் சாந்தினி, Dr.நிசாந்தன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராஜேந்திரன் (ஜேர்மனி), அமரர் ரூபாவதி, இரங்கநாதன் (அதிபர்), ரனுசியா(ஜேர்மனி), அபிராமி, கிருஸ்ணகுமார் (அவுஸ்திரேலியா), செல்வக்குமரன் (ஆசிரியர்), குகன்னியா (Dietitian) ஆகியோரின் மாமனாரும் சஹானா, கிரிஸ்டினா, செபினா, யோசியா, ரமணன், தயாரூபன், தயாநிதி, கார்த்திகா, சுகந்தன், ஷாமுவேல், ஷாரோன், ஷெர்வின், மகீஷ், லதுமிர்தன், துர்க்கா, சயோன், கஜலக்ஷன், அஸ்விதா, நிர்க்கவி, நிஷ்விக்கா ஆகியோரின் அருமைப் பேரனும் லேலானி, அனயா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2026) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
[illegible]

(C-5011)

இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப
10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▶ 2-3 Months
எமது நேரடி கிளைகள்
திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி (C-5013)
V2 TRAVELS 076 822 6244 076 455 0672

யாழ்.நகரில்...
விடுமுறைக்கால Extra Class
நடைபெறும் நிறுவனம்!
A/L - 2027 - 9a.m (Mon,Wed,Fri)
A/L - 2026 - 10 a.m - 12 p.m (Mon,Wed, Fri)
புவியியல் - N.BABU
புதிய தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
077 936 5087
DMI – ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-5012)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்ட அறிவித்தல்

திகதி :- (01.03.2026) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி
இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

(6857)

## பண்ணை வேலையாள் தேவை

பண்ணை வேலை தெரிந்த வேலையாள் தேவை. பசுக்களை பராமரிக்கக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு: 076 287 8655

(2057)

## யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் - 2026

காலம்:- (28.02.2026) சனிக்கிழமை, காலை 9.00 மணி
இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. சி. யுவகாந்தன்
செயலாளர்.

திரு. வை.விமலன் (அதிபர்)
தலைவர்.

(6855)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.